திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகின்ற விடுதிகளை அரசே ஏற்று நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அத்தகைய திட்டம் அரசு பரிசீலனையில் இல்லை.

திரு ப. பொன்னுரங்கம்; தலைவர் அவர்களே, என் தொகுதி யில் தாழ்த்தப்பட்ட மாணவியர்களுக்கான ஆஸ்டல் கட்டிடம் கட்டப்பட்டு, வெகு நாட்களாகத் திறக்கப்படாமல் இருக்கிறது. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி தனியார் துறையைப் பற்றியது. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

3. அறிவிப்பு

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாரா செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

1982 பிப்ரவரி 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10–20]

(ஆ) கடன் நிவாரண திருத்தச் சட்ட முன் வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோரு கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : கடன் நிவாரணச் சட்டம் சம்பந்தமாக ஒரு கிளாரிபிகேஷன். இந்தச் சட்டத்தை யாரும் எதிர்க்கப் போவதில்லை. அனைவரும் ஆதரிக்கக்கூடிய ஒன்று. ஏழைகளுக்குப் பயன்படக்கூடிய சட்டம். இந்தச் சட்டத்தை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை எதிர்ப்பதாக இருந்தால் ஆரம்பத்தில் கருத்துச் சொல்லாமே தவிர, சட்டத்தை ஆதரிப்பதாகக் கூறி இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுவது கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம் : இந்தச் சட்டம் செப்டம்பர் 30 ஆம் தேதி காலாவதியாகிறது. . . . . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்படுகிறது. பிறகு விவாதத்திற்கு வரும்போது விரிவாக இது போன்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்.

திரு. கோ. விஸ்வநாதன் : பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமுன் வடிவை அறிமுகம் செய்யும்போது அறிமுகம் செய்வதையே எதிர்ப்பவர்கள் மட்டுந்தான் ஏதாவது கருத்துக்களைச் சொல்ல லாமே தவிர, முழுமையாக ஆதரிக்கக்கூடியவர்கள் அவ்வாறு பேச உரிமையில்லை. தாங்கள் இதிலே முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பில்லில் இருக்கும் கோளாறைச் சொல்லுகிறேன்.